சுருக்கம்

தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 – திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களை தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினராக நியமனம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [நி.சீ 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 198 நாள் 27.4.2010

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 493, வருவாய்த்துறை, நாள் 23.12.2009.
2. திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப. (ஓய்வு) மனு நாள் 18.1.2010.
3. நிலச்சீர்திருத்த இயக்குநர் கடித எண். ந.க.எண்.1/01/பூ.வா.1 நாள் 22.2.2010.

-----

ஆணை:

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.493, வருவாய், நாள் 23.12.2009இல் தமிழ்நாடு பூமிதான வாரியம் மாண்புமிகு கதர்துறை அமைச்சர் தலைமையில் திருத்தி அமைக்கப்பட்டு, இவ்வாரியத்திற்கு நான்கு அலுவலல்சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் பத்து அலுவல்சாரா உறுப்பினர்கள் புதியதாக நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிகாலம் அரசாணை வெளியிட்ட நாளில் இருந்து நான்கு ஆண்டுகள் ஆகும்.

2. திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் அரசுக்கு அளித்த 18.1.2010 நாளது மனுவில் தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்ட பத்து அலுவல்சாரா உறுப்பினர்களில் ஒருவரான திரு எஸ்.ப்பி. முனியாண்டி என்பவர் காலமாகி விட்டதால், மேற்படி காலியான இடத்தில் பணிபுரிய தன்னை தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினராக நியமிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் மேலும் தனது மனுவில், தான் ஒரு சுதந்திர போராட்ட வீரர் எனவும், காந்திய இயக்கங்களிலும், பூமிதான இயக்கங்களிலும் அதிகம் ஈடுபாடு கொண்டுள்ளதாகவும், தற்போது காதி கிராம தொழில் வாரியத்தின் கௌரவ செயலாளராகவும், மதுரை காந்தி அருங்காட்சியகத்தின் துணை தலைவராகவும், திருசெங்கோடு காந்தி ஆஸ்ரமத்தின் தலைவராகவும் மற்றும் திட்டக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தனியர் தனது மனுவில் கடந்த 60 ஆண்டுகளாக காந்திய இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதாலும், தனது அரசு பணி காலத்தில் நான்கு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியராக பணி புரிந்து நிர்வாக அனுபவம் கொண்டுள்ளதாலும் தன்னை தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் ஓர் அலுவல்சாரா உறுப்பினராக நியமிக்குமாறு கேட்டு கொண்டுள்ளார்.

Verified RealEstate

3. திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களின் கோரிக்கையினை நன்கு பரிசீலனை செய்ததில் அவர் இப்பொறுப்பிற்கு மிகவும் தகுதியானவர் என்பது தெரிய வருகிறது. தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்ட பத்து அலுவல்சாரா உறுப்பினர்களில் ஒருவரான திரு எஸ்.ப்பி.முனியாண்டி என்பவர் 21.11.2007 அன்று இயற்கை எய்தியுள்ளார் என்பதை அன்னாரின் இறப்பு சான்றிதழ் மூலம் அறியப்படுகிறது. எனவே தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு அலுவல்சாரா உறுப்பினராக நியமிக்கப்பட்ட திரு எஸ்.ப்பி.முனியாண்டி என்பவருக்கு பதிலாக, திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களை அரசாணை (நிலை) எண்.493, வருவாய், நாள் 23.12.2009 மூலம் புதியதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் ஓர் அலுவல்சாரா உறுப்பினராக நியமனம் செய்து இதன் மூலம் ஆணை வெளியிடப்படுகிறது. திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி., இ.ஆ.ப (ஓய்வு) அவர்களின் பதவி காலம் இவ்வரசாணை வெளியிடும் நாளில் இருந்து காலஞ்சென்ற அலுவல்சாரா உறுப்பினர் திரு எஸ்.ப்பி.முனியாண்டி என்பவரின் பதவிக்காலமாக அரசாணை (நிலை) எண்.493, வருவாய், நாள் 23.12.2009இல் குறிப்பிடப்பட்ட காலம் வரையில் அதாவது நான்கு ஆண்டு பணி காலம் நிறைவு நாளான 22.12.2013 வரையில் நியமனம் செய்தும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

4. கீழே குறிப்பிட்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழ் அடுத்தப் பிரதியில் (Next Issue) வெளியிட்டு அதன் 50 படிகளை அரசுக்கு உடனடியாக அனுப்புமாறும் பணி மேலாளர், அரசு மைய அச்சகம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

<u>அறிவிக்கை</u>

தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 [1958–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XV] பிரிவு 4, உட்பிரிவு (1)–இன்படி தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு அரசாணை (நிலை) எண்.493, வருவாய்த்துறை, நாள் 23.12.2009–இன் மூலம் அலுவல்சாரா உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட காலஞ்சென்ற திரு எஸ்.ப்பி. முணியாண்டி என்பவருக்கு பதிலாக திரு கே.லட்சுமி காந்தன் பாரதி., என்பவரை தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் ஓர் அலுவல்சாரா உறுப்பினராக ஆணை வெளியிடும் தேதியிலிருந்து, இவ்வாரியத்தின் ஏனைய அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவி முடிவுரும் காலமான 22.12.2013 வரையில் நியமனம் செய்து தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆணையிடுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி.தனவேல்
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

1. பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை (அரசாணையின் பத்தி 4–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கை மட்டும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்).
2. மாண்புமிகு அமைச்சர் (கதர்), புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–9.
3. ஆணையர், நிலச்சீர்திருத்தத் துறை, சென்னை–5.
4. செயலர், வருவாய்த்துறை, சென்னை–9.
5. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–15.

VerifiedRealEstate

6. இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5.
7. திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு), துணை தலைவர், காந்தி நினைவு அருங்காட்சியகம், மதுரை–625 020.
8. திரு எஸ்.எஸ்.நாராயணன், தலைவர் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி, எண்.ட்டி–41/பி, 16வது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர், சென்னை–600 090.
9. திரு என்.சுந்தர்ராஜன், சர்வோதயா இல்லம், எம்.பி.நகர், வாடிப்பட்டி, மதுரை–625218.
10. திரு எஸ்.லோகநாதன், நிர்வாக இயக்குநர், சர்வ சேவா பண்ணைகளின் குழுமம் (ASSEFA) 279, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை–600 014.
11. திரு ஆர்.ராமச்சந்திரன், தலைவர், மாாட்ட சர்வோதய சங்கம், எண்.1416, திருநகர், நாஞ்சிகோட்டை சாலை, தஞ்சாவூர்– 613 006.
12. திரு வி.முருகன், அகம்பாடியார் தெரு, கொட்டாம்பட்டி அஞ்சல், மதுரை மாவட்டம்–625 103.
13. திரு கே.ஆர்.கண்ணன், 2/170 வி குடியிருப்பு, நல்லுக்குறிச்சி அஞ்சல், முதுகுளத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் – 623 601.
14. திரு கே.கே.ஜி.முத்தையா, கடவூர் கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.
15. திரு எம்.கே.ஜவஹர்பாபு, 9/4, வல்லபாய் ரோடு, சொக்கிகுளம், மதுரை–625 002.
16. திரு எம்.ஜி.எஸ்.ராமகிருஷ்ணா, பண்ணை இல்லம், முனைஞ்சிப்பட்டி, நாங்குநேரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்–627 355

**நகல்**

17. முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
18. முதன்மை செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
19. முதன்மை செயலர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
20. ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5
21. இயக்குநர், நகர்புற நில உச்சவரம்பு மற்றம் நகர்புற நிலவரித்துறை, சென்னை–5.
22. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–9.
23. பணியாளர் மற்றம் நிருவாக சீர்திருத்த (பணி–ஏ) துறை, சென்னை–9.
24. பொதுத் (சிறப்பு ஏ) துறை, சென்னை–9
25. வேளாண்மைத்துறை, சென்னை–9.
26. வருவாய்த்துறை (அனைத்துப் பிரிவுகள்) சென்னை–9.
27. தலைமைக் கணக்கு அலுவலர், சென்னை–18.
28. தலைமைக் கணக்கு அலுவலர், சென்னை–9.
29. சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5
30. இ.கோ/உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்